# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:1 Issue : 3 July 2019*

கோட்டை :1 வாயில்:3 ஜூலை 2019

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணவழகன்
முனைவர் கு.சிதம்பரம்
முனைவர் ஆர்.கமல தியாகராஜன்
முனைவர் டி.ஆதித்தன்
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
கலாநிதி ஶ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஹெப்சி ரோஸ்மேரி
முனைவர் சு.முத்துலட்சுமி
முனைவர் சாமி திருமாவளவன்
முனைவர் பா.வேலம்மாள்
முனைவர் விமலா அண்ணாதுரை
முனைவர் கி.ஐயப்பன்
முனைவர் பி.இராசலிங்கம் (தமிழகன்)
திரு வி.பாலமுருகன் (மயிலம் இளமுருகு)
முனைவர் வே.வே. மீனாட்சி
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
முனைவர் சி. கார்த்திகேயன்
முனைவர் *K.*முத்துராமன்
பேரா. முனைவர் சு.இராசவேலு
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் குடவாயில் பரலாசுப்பிரமணியன்
முனைவர் ர.பூங்குன்றன்
திரு. கி.ஶ்ரீதரன்
திரு. சரித்திரச்செம்மல் ச.கிருஷ்ணமூர்த்தி
சிற்பக்கலாநிதி ஸ்தபதி வே.இராமன்
திரு. காந்திராஜன்
முனைவர் ஆ.அன்பழகன்
முனைவர் சி. மகேஸ்வரன்
முனைவர் எஸ்.சந்திரசேகரன்
முனைவர் *P.*பாண்டிக்குமார்
முனைவர் பகவதி சுந்தரம் சிவமாருதி
முனைவர் எம்.கஜராஜன்
திரு. கா. பால கிருஷ்ணன் (பாலபாரதி)
திரு. சிங்க நெஞ்சன்

## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
## இதழாக்கம்

**பேரா. முனைவர் பிரியாகிருஷ்ணன்**



***+917299587879***

www.aranejournal.com
aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் **(Peer Review)**பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்


கடைச்சங்கக் கடைசி அரசனின் அறியப்பெறவேண்டிய வரலாறு
முனைவர் வாணி அறிவாளன்

புறப்பொருள் வெண்பாமாலை வெளிப்படுத்தும் வாழ்வியல் நெறிகள்
முனைவர் க.லெனின்

ஒப்பீட்டு நோக்கில் அகத்திணை மரபும் காமத்துப்பாலும்
முனைவர் ப.விமலா அண்ணாதுரை,

குறிஞ்சித்திணையில் கருப்பொருள் வெளிப்பாடு
முனைவர் தி.மணிமொழி

சங்ககாலப் பெண்பாற்புலவர் பாடல்களில் நாடகக் காட்சிப்படிமம்
து. உமாமகேஸ்வரி

பதினெண் கீழ்க்கணக்கில் இருவாழ்விகள்
திருமதி ச.மீனாட்சி

தமிழ்ச் சிறுகதைகளின் மாறுபட்ட சமூகநிலைகளும் பின்புலங்களும்
முனைவர். வி.கலாவதி

தமிழ் நாடகங்களின் விளம்பர உத்திகள்
முனைவர்.க. தினகரன்

இணையத்தில் தமிழ் மொழியின்பயன்பாட்டை மேம்படுத்தல் - ஒருங்குறியீட்டு முறை
இரா.அருணா,

தமிழ் மின் அகராதிகள் (E-Dictionaries in Tamil)
முனைவர் மா.ரமேஷ் குமார்

நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் சடங்குகள்
முனைவர் சீ. இளையராஜா

சிறுதெய்வவழிபாட்டுமுறைகளில் மக்களின் எண்ணங்கள்
முனைவர் தே. அசோக்

# அகத்தினுள்


INCORPORATION & MANIFESTATIONS OF 'SATI ELEMENTS' WITHIN THE HERO-STONES OF WESTERN TAMILNADU
**Dr. C.Maheswaran**

Neolithic Grooves found at Keezanur, Javadi hills of Tamil Nadu
**Dr. R.Ramesh**

பழந்தமிழர் பண்பாட்டில் தோல் ஓவியத்தின் பயன்பாடு
**ஓவியர். கு. கவிமணி**

Recent Archaeological Explorations in Shervarayan Hills, Tamil Nadu
**-Dr. Priyakrishnan**

ஈழப்பாண்டியன் சேந்தன் மாறன் காசு
**இராஜ சுப்பிரமணியன்**

சிலப்பதிகாரத்தில் தொல்குடிகளின் வழிபாட்டு மரபுகள்
**கோ.சதீஸ்**

தமிழகப்பழங்குடிகளின் தெருக்கூத்து அமைப்புமுறை
**முனைவர் ரே.கோவிந்தராஜ்**

உயிரியல்மற்றும் சமூகமொழியியல் பார்வைகளில் பாரதியாரின் தேசீயப் படைப்புகளின்பகுப்பாய்வு
[Biolinguistics and Sociolinguistics Approach towards Nationality in Bharathiar Patriotic Poems]
**முனைவர் சு. சந்திரசேகரன், முனைவர் சி.சித்ரா**


**முகப்பு**
**மராத்திய நடன மங்கை (தோல் பாவை)**



# தமிழ்

# ஒப்பீட்டு நோக்கில் அகத்திணை மரபும் காமத்துப்பாலும்

*முனைவர் ப.விமலா அண்ணாதுரை,*
*தமிழ்த்துறைத்தலைவர்,*
*செல்லம்மாள் மகளிர் கல்லூரி,*
*கிண்டி, சென்னை — 32,*

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க கால தமிழ் கவிஞர்களால் எழுதப்பட்ட கவிதைகள் பின்னாளில் அவற்றின் உள்ளடக்கத்தை கருத்திற்கொண்டு அகநூல்களாகவும் புறநூல்களாகவும் தொகுக்கப்பெற்றுள்ளன. இவற்றுள் அகம் சார்பான கவிதைகளே மிகப் பெரும்பான்மையின.இத்தகைய அகத்துறை கவிதைகளை மொத்தமாக நோக்கும் போது,அவை வேறு வேறு கவிஞர்களால் எழுதப்பட்டிருந்தாலும்,அவற்றிடையே பாடல் அமைப்பு ,உணர்த்துமுறை ஆகிய பல விடயங்களிலும் நிரம்பிய ஒற்றுமை இருப்பதை காண முடிகிறது. இதன் மூலம் பாடல்கள் தோன்றிய காலப்பகுதியில் கவிஞர்கள் குறிப்பிட்ட ஓர் இலக்கியமரபைப் பின்பற்றியே கவிதைகளை ஆக்கியுள்ளமை தெளிவாகிறது. இம்மரபே சங்க அகத்திணை மரபு என்று அறிஞர்களால் கூறப்பெறுகின்றது.இவ்வகையில் அகத்திணை மரபும்,காமத்துப்பாலும் தலைப்பின்கீழ் இக்கட்டுரை ஆராயப்பட உள்ளது.*

**திறவுச் சொற்கள்:** *அகத்திணை,காமத்துப்பால்,பரத்தையர்,தலைவன்,தலைவி,தோழி*

*சங்க அகத்துறைக் கவிதைகள் வாயிலாகப் பெறப்பெற்ற விடயங்கள் தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் நான்கு இயல்களில் நிரல்படுத்தப்பட்டுள்ளன சங்க காலத்தை ஒட்டிய அடுத்த காலப்பகுதியில் (கால நிர்ணயம் தொடர்பான கருத்து முரண்பாடுகள் இன்றளவும் காணப்படுகின்றன.)தோற்றம் பெற்ற திருக்குறள் நூலில் அகத்துறை தொடர்பான தனித்த பிரிவு* ***காமத்துப்பால்*** *என்னும் பெயரில் உள்ள 25 அதிகாரங்களாகும்.*

*பெரிய கால இடைவெளி இன்றி அடுத்தடுத்து தோன்றியுள்ள சங்க அகத்துறை கவிதைகளுக்கும் திருக்குறள்-காமத்துப்பால் கவிதைகளுக்கும் இடையே சில ஒற்றுமைகளும் சில வேற்றுமைகளும் காணப்படுகின்றன. இவற்றைச் சற்று விரிவாகக் காண்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும் (ஆய்வு விரிவிற்கு அஞ்சி, சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறாமை, பரத்தையர் பிரிவு,உள்ளுறை உவமம். நாடக வழக்கும் கூற்றும் ஆகிய நான்கு அடிப்படையில் மட்டும் இங்கு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.)*

### அகத்திணை -விளக்கம்

***'ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப்பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்கு புலனாக இவ்வாறு இருந்ததென கூறப்பட்டதாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பம் உருவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார்'*** *என்பது நச்சினார்க்கினியரின் வரைவிலக்கணம் ஆகும்.*

*அகம் என்பது மக்களின் உள்ளம் தொடர்பான காதல் உணர்ச்சியாகும். திணை என்பது ஒழுக்கம் ஆகும் .எனவே காதல் உணர்ச்சி சார்ந்த ஒழுக்கத்தையே அகத்திணை எனப் பெரியோர் வழங்கியுள்ளதாகக் கொள்ளலாம்.*

*இக்காதல் ஒழுக்கத்தை ஏழு திணைகளாக வகைப்படுத்தி நோக்குவது சங்க அகத்திணை மரபாகும்.*

**"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப' (தொல் 947)**

என்னும் தொல்காப்பிய சூத்திரம் இதனை உறுதி செய்யும்.இவ்வேழு திணைகளையும் கைக்கிளை, குறிஞ்சி, முல்லை ,பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை என வரிசைப்படுத்தலாம், இவை ஏழும் சங்க அகத்துறைப் பாடல்களில் பயின்று வந்துள்ளன எனினும், இடையே கூறப்பெற்றுள்ள குறிஞ்சி முதலான ஐந்து திணைகளையுமே சங்கக் கவிதைகள் பெரிதும் போற்றி உள்ளன. அவற்றோடு ஒப்பிடுகின்றவிடத்து கைக்கிளை ,பெருந்திணை ஆகியன முக்கியத்துவமுடையன அல்ல .இதனையே,

**"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப.. " (தொல் 947)**
**மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்— (தொல் 1000)**

எனும் தொல்காப்பிய சூத்திரங்கள் தெரிவிக்கின்றன. ஐந்திணைகளை பலப்பட விளக்கிய தொல்காப்பியம் கைக்கிளை, பெருந்திணைகளை இறுதியில் இரு தனிச்சூத்திரங்களில் மட்டும் பாடியிருக்கின்றமை கவனிப்புக்குரியது. சங்க அகத்திணைப் பாடல்களுள் முக்கியத்துவம் இல்லாதவையும் உயர்த்திப் பேசப்படாதவனவாயும் விளங்கிய கைக்கிளையும், பெரும் திணையையும் திருவள்ளுவர் தமது நூலில் குறிப்பிடவில்லை. 'அறத்தான் வருவதே இன்பம்' என்பதை பெரிதும் வலியுறுத்தும் திருவள்ளுவர் ஒருதலை காமத்தையும்,பொருந்தா காமத்தையும் தமது நூலில் குறிப்பிடாமல் தவிர்த்திருப்பார் என்பதை புரிந்து கொள்வதில் சிரமம் இல்லை.

இவ்வாறு அகத்திணை மரபு கூறும் முதல், கரு. உரிப் பொருள்களாகிய மூன்றனுள்ளும் உரிப்பொருளையே திருக்குறள் பெரிதும் எடுத்தோதுகிறது. நெய்தல் நிலத் தலைமகனாகிய துறைவன் குறித்தும் (குறள்கள் 1157. 1277), சிறுபொழுதுகளுள் ஒன்றாகிய மாலை குறித்தும் சில குறள்களை வள்ளுவர் படைத்துள்ள பொழுதும் இவ்வாறு நிலம்குறித்தோ பொழுதுகுறித்தோ தனித்த அடையாளம் சுட்டிப்பாடுவது வள்ளுவரது வழக்கு இல்லை. பொதுமறையாகிய நூலைத் தந்த வள்ளுவர் முதல், கருப்பொருட்களாக விவரிப்பதன் ஊடாக உரிப்பொருளை விளக்க விரும்பவில்லையென்பதையே இது காட்டுகிறது.

**சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாமை:**

அகத்திணை மரபில் காதல் தலைவன் அல்லது தலைவியுடைய பெயரை சுட்டிக் கூறாமல் கவிதை பாடுவது பிரதானமான ஒன்றாகும்.

மக்கள் நுதலிய அகன்ஐந்திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பெறாஅர். **(தொல் 1000)**

என்பது தொல்காப்பியம். பெயர்சுட்டிக் கூறப்பெற்ற காதல் பாடல்கள் அவற்றின் உரிப்பொருளைக் கருத்திற்கொள்ளாமல். பெயர் சூட்டிய பண்பொன்றையே கருத்திற்கொண்டு, புறத்திணையுள் அடக்கப்பெற்றுள்ளன. பெயர் சுட்டிக் கூறின் அதனால் பல்விதமான பாதக அம்சங்கள் தோன்றி இலக்கியத்தை ஊறுபடுத்திவிடும் என்று அக்கால அறிஞர்கள் கருதியிருந்துள்ளமையாலேயே மேற்படி விதி கடுமையாகப் பின்பற்றப்பட்டது எனலாம்.பெயர் சுட்டி காதற் பாடல்களை ஆக்குவதனால் ஏற்படக்கூடிய பிரச்னைகளை விமர்சகர் பலவாறாகக் கூறுவர். அவற்றுள் பின்வருவன மிக முக்கியமானவை.

**ஒருவரின் பெயர் சுட்ட அனுமதித்தால் பெரும்பான்மையும் கவிஞர்கள் தமது புலவர்களையோ மன்னர்களையோ தாம் நாயகர்களாக்கிப் பாடுவர். இதனால் கவிஞர்களுடைய முக்கிய நோக்கமாகிய படைப்பாக்கம் இரண்டாம் பட்சமாகிவிடும்.**

**காதலரின் மறைமுகச் சந்திப்பை கவிதையாக்கும் அகத்துறையில், இன்ன ஊர், இன்னாரின் பெண். என்ன பெயருடையாள். இன்ன பெயருடைய இளைஞனை சந்தித்து காதல் மொழி பேசினாள் என்று உரைப்பது பெருந்தீங்காக முடியும்.**

***கவிதை கற்பனை என்ற மலைமுடியுனின்று, வரலாறு என்ற பள்ளத்தாக்கில் வீழ்ந்து விடும்.*[1]**

இவை அனைத்தும் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாக இருப்பினும் இவற்றுக்கு மேலாக கொள்ளப்படக்கூடிய ஒரு காரணமும் உண்டு. அது அனைவருக்குமுரிய காதலைப் பெயர் சுட்டுவதன் மூலம், தனிமைப்படுத்தி விடாமல் வாசித்து அனுபவிக்கும் ஒவ்வொருவருக்கும் அது தன்னுடைய அனுபவம் என்பதான சிந்தனையை ஏற்படுத்திவிட வேண்டும் என்பதே.

உண்மையில் இந்த நோக்கம் உயர்வானதுதான் என்ற போதும் சங்க அகத்திணைப் பாடல்கள் அத்துணையும் வாசிப்போர்க்கு மேற்படி உணர்ச்சியை ஏற்படுத்தவல்லன அல்ல என்பதைப் புரிந்து கொள்ளமுடியும். இத்தகையதொரு நிலை ஏற்பட்டதற்கு பின்வரும் இரு விஷயங்களை முக்கிய காரணங்களாகக் காணலாம்.

1. **காதல் தலைவனுடைய பெயர் சுட்டப்பெறாதபோதும், அப்பாடல்களில் புலவர்க்கு நெருக்கமான மன்னர்களுடைய பெயர் சுட்டப் பெற்று, அம்மன்னர் புகழ் அதிகம் போற்றப்பட்டதனால் காதல் உணர்ச்சி எனும் அடிப்படை நோக்கம் திசைமாறிச் செல்ல தொடங்கியமை**

2. **உரிப்பொருளுக்கு மாத்திரம் முதன்மை வழங்காமல் பல அகக்கவிதைகள் முதல் பொருள் மற்றும் கருப்பொருள்களுக்கும் மிகுந்த இடமளித்ததனால் அந்தந்த நிலஞ்சார்ந்த வாசகர்களுக்கு மட்டுமே அக்கவிதைகள் பெரிதும் நெருக்கமாக இருந்தது. அதேவேளை மற்றவர்க்கு அந்நியத்தன்மையை தோற்றுவித்தமை.**

உவமை முதலியவற்றால் மன்னர் முதலிய புரவலர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கத்தால் எவ்வாறு அகவுணர்ச்சி அகத்திணைப் பாடல்களில் பின்தள்ளப்பட்டது என்பதற்கு ஓர் எளிய உதாரணமாக பின்வரும் அகநானூற்றுப் பாடலைக் குறிப்பிடுதல் முடியும். தலைவன், ''நறும்பல் கூந்தல் குறுந்தொடி மடந்தையொடு வதுவை அயர்ந்தால்'' ஊரில் எழுந்த அலர் குறித்துப் பாடப் புகுந்த கவிஞர் , ''அவ்வலரானது பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனது போர் வீரர்கள் செய்த வெற்றி ஆரவாரத்திலும் பெரிது'' எனக் கூறிப் பின்வருமாறு அப் புறப்போர் வெற்றியைச் சொல்லத் தலைப்படுகிறார்.

**கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்,**
**ஆலிங் கனத் தகன்றலே சிவப்பச்**
**சேரல் செம்பியன், சினங்கெழு திதியன்,**
**போர்வல் யானைப் பொலம்பூண் எழினி,**
**தாரகி நறவின் எருமை யூரன்,**
**தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்**
**இருங்கே வேண்மான், இயல்தேர்ப் பொருநன் என்று**

**எழுவர் நல்வலம் அடங்க, ஒருபகல்**
**முரசொடு வெண்கொடை அகப்படுத் துரைசெலக்**
**கொன்றுகளம் வேட்ட ஞான்றை**
**வென்றிகொள் வீரர் ஆர்ப்பினும் பெரிதே அகநானூறு 38**

**(மதுரை நக்கீரர்)**

இத ஒரு புறப்பாட்டோ என எண்ணத்தூண்டும் அளவுக்குப் பாண்டியன் யார் யாரை எல்லாம் வென்றான் என்பது குறித்து விரித்து சொல்லுகிற கவிஞர் போக்கு கூறப்புகுந்த காதல் விஷயத்தைவிட அதிகமாகி. உரிப்பொருளை வாசகர் இனிதாக உணர்வதற்கு இடையூறு செய்வதைக் காணமுடிகிறது. இவ்வாறு எல்லா மக்களுக்கும் பொதுவாய் அமையத்தக்க காதலற்கவிதை பாண்டிய மன்னனது புகழ்ச்சிப் பாடலாகியிருப்பதன் மூலம் பாண்டியரல்லாத பிறர்க்கு அந்நியவுணர்வைத் தோற்றுவிப்பதாய் விளங்கிநிற்கிறது.

ஆனால் திருக்குறள்-காமத்துப்பாலோ இத்தகைய வேறுபாட்டுணர்ச்சியை கூட வாசகர்களுக்கு வழங்காமல் அனைவருக்கும் பொருந்தக்கூடிய ஏற்புடைமைத் தன்மையை கொண்டதாக விளங்குகிறது. காதல் கவிதைகளில் உவமையணி முதலியவற்றை அமைக்க வேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்த இடங்களிலெல்லாம், தனித்துச் சிறு குழுமத்துக்கு மட்டும் பொருந்தக்கூடிய உவமைகளைத் தராமல், அனைத்து மக்களுக்கும் பொருந்தக்கூடிய உவமைகளையே பெரிதும் பயன்படுத்தியிருப்பதன் மூலம் தமது காதல் குறட்பாக்களுக்கு ஒரு எல்லையை வகுக்காமல் திருவள்ளுவர் பொதுத்தன்மையோடு இருந்துள்ளமை புலனாகிறது. அதுவும் மனித குலத்திற்கு அவசியம் என்று கருதுகின்ற அறச் செயல்பாடுகளே காதல் நடவடிக்கைகளுக்கும் வள்ளுவரிடம் உவமைகளாகப் பெரிதும் வெளிவந்துள்ளன.

**தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்**
**அம்மா அரிவை முயக்கு (குறள் 1107)**
**(உரை:அழகிய மா நிறம் உடைய இவளுடைய தழுவுதல், தம்முடைய வீட்டிலிருந்து தாம் ஈட்டிய பொருளைப் பகுந்து கொடுத்து உண்டாற் போன்றது.).**
**அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்**
**செறிதோறும் சேயிழை மாட்டு.( குறள் 1110)**
**(உரை ;செந்நிற அணிகலன்களை அணிந்த இவளிடம் பொருந்துந்தோறும் காதல் உணர்தல், நூற்பொருள்களை அறிய அறிய அறியாமை கண்டாற் போன்றது).**
**உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன**
**மடந்தையொடு எம்மிடை நட்பு. (குறள் 1122)**
**(உரை ; இம் மடந்தையோடு எம்மிடையே உள்ள நட்பு முறைகள், உடம்போடு உயிர்க்கு உள்ள தொடர்புகள், எத்தன்மையானவையோ அத்தன்மையானவை.)**

இவ்வாறு சுட்டியொருவர் பெயர் கொளப்பெறாத சங்க அகத்திணைப் பாடல்களில் மன்னர்தம் புகழ்ச்சி முதலியவற்றால் வெளித்தெரிவது போன்ற தனித்த அடையாளங்கள் கூட திருக்குறள் காமத்துப்பாலில் காணக்கிடைக்காது என்பதும், இதனால், காமத்துப்பாலானது சங்க அகப்பாடல்களை விடவும் இன்னும் பொதுமையானதாய் விளங்குகிறது என்பதும் புலனாகின்றன.

**பரத்தையர் பிரிவு;**

சங்க அகத்திணை மரபில், தலைவன் தலைவியைப் பிரிந்துசெல்வதற்கான காரணங்களுள் ஒன்றாகப் பரத்தையும் குறிக்கப்பெற்றுள்ளாள். இதனை **'ஊடலும் ஊடல் நிமித்தமும்'** குறித்த மருதத்திணைப் பாடல்கள் பெரிதும் பேசுகின்றன. தொல்காப்பியமும் அகத்திணை இயலில் தலைவனுக்குரிய பிரிவுகளாக ஓதல், பகை, தூது ,பொருள் ஆகியவற்றைச் சுட்டியதோடு அமையாமல் பொருளியலில் பரத்தையர் பிரிவையும்

சுட்டியுள்ளது. இவற்றினடிப்படையில் பரத்தை தொடர்பாகத் தலைவன் பிரிந்து சென்றிருப்பதையும் மீளத்தலைவியை நாடும் தலைவனோடு பரத்தை தொடர்பாகத் தலைவி ஊடியிருப்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. இவ்விடத்தில் எழக்கூடிய முக்கிய வினா இப்பரத்தையர் பிரிவு உண்மையில் சங்க கால மக்கள் வாழ்வியலில் இடம்பெற்றிருந்தது தானா? என்பதாகும். சிலர் இதனை உடன்படுவர். வேறு சிலரோ, கவிஞர்கள் புலனெறி வழக்கில் தலைவியரின் ஊடற் காரணங்களுள் ஒன்றாக பரத்தையர் பிரிவைக் குறித்தனரேயன்றி உண்மையில் இத்தகு பிரிவு மக்கள் வாழ்வியலில் காணப்படவில்லை என்பர்.[2]

ஆனால் மருதத் திணைப் பாடல்களைக் கூர்ந்து நோக்கினால் பரத்தையர் பிரிவு சங்க கால மக்கள் வாழ்வியலிலும் இருந்தமையை உணர்ந்து கொள்ள முடியும் இதனையே.

> **“இங்ஙனம் பலவகையாலும் உயர்நெறியாகிய அன்புடை வாழ்க்கை பூவிற்குப் புள்ளிகள் வைத்தார் போலவும். மதிக்கு மறுவாய்த்தாற் போலவும் பரத்தையர் பிரிவென்னும் இழிந்த ஒழுக்கத்தினால் சிறிது கலக்கம் அடைகின்றது… இப்பரத்தையிற் பிரிவு உலகியலையே கருதி அமைந்தது போலும். தலைவியின் ஊடலுக்குக் காரணம் வேண்டும் என்பதற்காக இப்பரத்தையிற் பிரிவு அமைந்ததென்பது அத்துணைச் சிறந்த காரணமாகத் தோற்றவில்லை’”[3]**

எனும் உ.வே சாமிநாதையரின் வரிகளும் மெய்ப்பிக்கின்றன.

ஆனால் அறத்தை முதன்மைப்படுத்தியே இன்பத்தையும் கூறப்புகுந்த திருவள்ளுவரோ பரத்தையிற் பிரிவை ஏற்றுக் கொள்ளவில்லை. உடல் குறித்து சில அதிகாரங்களைக் காமத்துப்பாலில் எழுதியுள்ள போதும் அவற்றுள் பரத்தையின் தொடர்பு பற்றித் தலைவி ஊடுவதாக வள்ளுவர் காட்டவில்லை. எனினும் சங்க அகத்திணை மரபுக்குள் திருவள்ளுவருடைய காமத்துப்பால் முழுமையையும் காணவிரும்பிய உரையாசிரியர்கள் வலிந்து சில குறட்பாக்களை பரத்தையிற் பிரிவு தொடர்பாக சுட்டியிருப்பது பொருத்தமானதாகப் படவில்லை. உதாரணமாக,

> **”நாண் என ஒன்றோ அறியலம் காமத்தால்**
>
> **பெணியார் பெட்ட செயின்.”***(குறள் 1257*)
>
> **(உரை ;நாணம் என்னும் தாழ்ப்பாள் பொருந்திய நிறை என்று சொல்லப்படும் கதவை காமம் ஆகிய கோடாலி உடைத்து விடுகிறதே).**

எனும் நிறையழிதல் அதிகாரக் குறளுக்குத் துறை வகுத்துள்ள பரிமேலழகர் **“பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனோடு நிறை அறிவால் கூடிய தலைமகள் நீ புலமைக்கு காரணம் யாது? என்ற தோழிக்குச் சொல்லியது”** எனக் குறிப்பிட்டுள்ளமை குறளின் நேரடிக்கருத்திற்கு எவ்விதத்திலும் பொருத்தமானதாகப் படவில்லை. இங்கு தலைவன் பிரிந்து வந்தமை கூறப்பட்டுள்ளதே தவிர. அப்பிரிவு பரத்தை தொடர்பானது தானா? என்பது கவிஞரால் கூறப்படவில்லை அப்பிரிவு எது பற்றியதாயும் இருக்கலாம். இங்கு பிரிவுக்கான காரணம் முக்கியமானதல்ல. அதன் பின்பான உணர்ச்சியே முக்கியமானதாகும்.

இவ்வாறு அவசியமற்றிருக்கிற இடத்திற்கூட தலைவனுக்கான பிரிவை பரத்தை தொடர்பாகக் காணுகின்ற உரையாசிரியர் போக்கானது. நூலாசிரியரின் ஆழ்ந்திருக்கும் கவியுளத்தைக் கவனியாது சங்க அகத்திணை மரபை முழுமையாகத் திருக்குறளிலே காணுகின்ற

ஆசையினால் விளைந்தது என்பது புலப்படுகிறது. ஆகவே பரத்தை தொடர்பாக உரையும் துறையும் வகுத்துள்ள உரையாசிரியர் தம் உரைகளைப் பின் வந்த குறளியல் அறிஞர்கள் பலரும் மறுத்துரைத்துள்ளனர். எனினும் அவர்களுடைய கருத்துக்கு எதிராகப் பின்வரும் குறளைச் சிலர் எடுத்துக்காட்டுவதுமுண்டு.

**பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்**
**நண்ணேன் பரத்தநின் மார்பு .. (குறள் :1311)**

**உரை: பரத்தமை உடையாய்! பெண்தன்மை உடையவர் எல்லாரும் தம்தம் கண்களால் பொதுப் பொருளாகக் கொண்டு நுகர்கின்றார்கள; ஆகையால் உன் மார்பைப் பொருந்தேன்.**

இக்குறளில் வள்ளுவர் பரத்தையிற் பிரிவையே சுட்டினார் என்பது வெளிப்படையாகத் தெரிவதாக சிலர் கூறுவதும். அதற்கு எடுத்துக்காட்டாக குறளிலுள்ள 'பரத்த' எனும் விளிப்பெயரை எடுத்துகாட்டுவதும் உண்டு. எனினும் அது உண்மையன்று. இங்கு ஊடுருவதற்காகப் பிற காரணங்கள் இல்லாதபொழுது பொய்க்காரணம் ஒன்றை ஏற்றியே தலைவி ஊடியிருப்பதனை நுட்பமான வாசிப்பின் மூலம் புரிந்து கொள்ளலாம்.

இங்கு செயல் என்பது தலைவன் மேல் இல்லை. பெண்கள் மேல் உள்ளது. அதாவது 'நீ பெண்ணியலாளரை உண்டாய்' என்று தலைவனைக் குற்றஞசாட்டப்படவில்லை. பெண்ணியலாரே உன்னை கண்ணாலுண்டனர் என்றே கூறப்பட்டுள்ளது. ஆதலால் தலைவி ஊடுவதற்கான காரணச்செயல் தலைவனுடையது அல்ல என்பது புலனாகும். எனினும் இவ்விடத்தில் இன்னொரு கேள்வி எழுகிறது. பெண்கள் தலைவனை கண்ணால் உண்டனரென்றால் அது அப்பெண்களுடைய அறவுள்ளம் தொடர்பான சந்தேகத்தை ஏற்படுத்திவிடுகிறது. இத்தலைவிக்குரிய தலைமகனை பிற தலைவர்களுக்கு உரித்தான பெண்கள் கண்ணால் உண்ணுதல் அறப்பிறழ்வு இல்லையா? என்பது நியாயமான கேள்வியே. ஆனால் கவிஞர் அக்கேள்வியைக் கூட பயனில்கேள்வியாக்கி விடுகிறார். இங்கு ஆடவனை நோக்கிய பெண்கள் கூட அவனை பொதுப்பார்வைதான் பார்த்தார்கள் எனும்படிக்கு **"பொதுவுண்பர்'** எனும் வார்த்தையைக் கவிஞர் அமைந்திருக்கும் நுட்பம் நோக்கத்தக்கது. இதன்படி பிற பெண்களை கண்ணால் உண்ணாமலும், அப்பெண்களால் சிறப்புப் பார்வையாலன்றிப் பொது பார்வையால் மாத்திரம் நோக்கப்பெற்றும் வந்த தனது தலைமகன் மீது பிற காரணமேதும் இல்லாதபோதும், இதனையே மெல்லிய கோபத்திற்குரிய ஓர் ஊடற்காரணமாகக் கொண்டு ஊடுகிற ஒரு தலைவியையே வள்ளுவர் இங்கே காட்டியிருக்கிறார் என்பதே பொருத்தமானது. இக்குறளைக்கூட பரத்தையிற் பிரிவை திருவள்ளுவர் ஏற்றார் என்பதற்கான சான்றாகக் கொள்ள.முடியவில்லை. மாறாகக் கொண்டால்.

**'"இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்**
**வல்லது அவர்அளிக்கு மாறு'". (குறள் 1321)**

**உரை: எந்த தவறும் இல்லாத நிலையிலும்கூட காதலர்க்கிடையே தோன்றும் ஊடல், அவர்களின் அன்பை மிகுதியாக வளர்க்கக் கூடியது.**

என்னும் குறள் முரண்படுவதைக் காணலாம். எனவே,தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் குறிப்பிடுவதைப்போன்று பரத்தையர் என்ற பேச்சே காமத்துப்பாலில் இல்லை என துணிவது தான் சிறப்பானது.[4]

**உள்ளுறை உவமம்;**

சங்க அகத்திணை மரபில் உள்ளுறை உவமப் பிரயோகம் மிகப்பெரிய முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஒரு பாடலின் திணையை உணர்ந்து கொள்வதற்கு உள்ளுறை உவமமும் பயன்படுகிறது என்பதையும் தெய்வம் நீங்கலாக ஏனைய கருப்பொருள்கள் அனைத்தையும்

நிலைக்களனாகக் கொண்டு உள்ளுறை உவமம் தோற்றம் பெறலாம் என்பதையும் தொல்காப்பியத்தின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

**உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகென**
**உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்.(தொல் 994)**

**ஏனை உவமம் தானுனர் வகைத்தே (தொல் 995)**

இவ்வாறு, முதற்பொருளும் கருப்பொருளும் முதன்மை வழங்கும் — அகத்திணைப் பாடல்களுக்கு மட்டுமே சிறப்பாக விளங்கிநிற்கும்-- உள்ளுறை உவமையை வள்ளுவர் காமத்துப்பாலில் அமைத்துக் கொள்ளவில்லை. இதற்குக் காரணமாக அடிச்சிறுமையை உடைய குறள் வெண்பாவை வள்ளுவர் தமது நூலுக்குரிய வடிவமாகத் தேர்ந்து கொண்டமைதான் காரணமெனப் பலரும் குறித்துள்ளனர்.

***'"பாடலின் அடிக்குறுமை நெடுமைகட்கு ஏற்ப முதல் கருப்பொருட்களின் புனைவு அகஇலக்கியங்களில் அமைந்திருக்கும்-- தாம் கருதும் செய்திகளை வெளிப்படையாகக் கூறாது கருப்பொருள்களின் துணையாக உள்ளுறை, இறைச்சி என்பனவற்றைக் கொண்டு குறிப்பினால் உணர்த்துதல் சங்கப்புலவர்களின் தனிச்சிறப்பாகும் -- இங்ஙனம் செய்திகளைக் குறிப்பின் உணர்த்த கருப்பொருள்களின் புனைவு பயன்படுத்தலைச் சங்க அகப்பாடல்களில் காணலாம். குறுகிய அடிகளால் இயன்ற காமத்துப்பாலில் அதனை காணவியலாது'"*** [5]

மேலே சொல்லப்பெற்ற காரணம் ஏற்றுக்கொள்ளக் கூடியதே. அடி எண்ணிக்கை குறைந்துவரக் குறைந்துவர முதல் கருவாகிய பொருள்களைத் தவிர்த்துப் பிரதானமான உரிபொருளிலேயே நிலைகொள்ளுகின்ற பாங்கை சங்க அகநூல்களிலேயே காணமுடியும். ஒப்பீட்டு ரீதியில் அகநானூற்றை விடவும் கருப்பொருள் விவரிப்பும் உள்ளுறை உவமைப் பயன்பாடும் குறுந்தொகையில் மிகவும் குறைந்திருக்கக் காணலாம். எனினும் இக்காரணம் ஒன்றையே முன்னிட்டு திருவள்ளுவர் காமத்துப்பாலில் உள்ளுறை உவமத்தை அமைக்கவில்லை எனும் முடிவுக்கு வருதல் எத்துணைத்தூரம் பொருத்தமானது என்பது ஆய்வுக்குரியது. ஏனெனில், உள்ளுறையின் வளர்ச்சியாகக் கருதத்தக்க நுவலா நுவற்சி அணியை வள்ளுவர் பொருட்பாலில் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே உள்ளுறையை வள்ளுவர் தவிர்த்தமைக்குக் காரணமாக ஈரடிச்சிறுமையை மட்டும் குறிக்க முடியவில்லை. வேறொரு காரணம் பற்றி அவர் உள்ளுறையைத் தவிர்த்தவராகலாம் அக்காரணம் அவருடைய படைப்புக்கொள்கை எனக் குறிப்பிடுவது தவறாகாது. படைப்பை மக்கள் அனைவரும் விளங்கிக்கொள்ளக் கூடியதாகத் தரவேண்டுமென்பது வள்ளுவருடைய படைப்பு கொள்கையாக விளங்கியிருக்க வேண்டும்.

**'"வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்**
**மாட்சியின் மாசற்றார் கோள்.'"( குறள் 646)**

**உரை:பிறர் விரும்பும் படியாகத் தாம் சொல்லின் பிறர் சொல்லும் போது அச் சொல்லின் பயனை ஆராய்ந்து கொள்ளுதல் மாசற்ற சிறப்புடையவரின் கொள்கையாகும்.**

என்னும் சொல்வன்மை அதிகாரக்குறளையும்.

**'"எண் பொருளவாகச் செலச் சொல்லித் தான் பிறர் வாய்**
**நுண்பொருள் காண்ப தறிவு'" (குறள் ; 0424)**

**(உரை: தான் சொல்லுவன எளிய பொருளையுடையனவாகப் பதியுமாறு சொல்லித், தான் பிறரிடம் கேட்பவற்றின் நுட்பமான பொருளையும் ஆராய்ந்து காண்பது அறிவாகும்).**

என்னும் அறிவுடமை அதிகாரக் குறளையும் நோக்கும் பொழுது வள்ளுவருடைய படைப்புக்கொள்கை குறித்த தெளிவை அறிந்துகொள்ள முடிகிறது. படைப்பைத் தருகின்ற படைப்பாளி பெரிய கல்வியறிவல்லாத வாசகர்களும் விளங்கிக்கொள்ளக் கூடியதாகச் சொற்களைக்கூட மிக எளிமையாகக் கையாளவேண்டும் என்பது வள்ளுவருடைய கொள்கை என்பதை இக்குறள்கள் அறிவிக்கின்றன. '"எண்பொருளவாக" எனும் குறளுக்கு உரை விளக்கஞ்செய்த பரிமேலழகர் "சொல்லுவன வழுவின்றி இனிது விளங்கச் சொல்லுக என்பார் சொல்மேல் வைத்தும்... கூறினார்"' என தெரிவித்திருப்பது இதனை அரண் செய்கிறது

எனவே வள்ளுவர் கற்றோர்க்கன்றி மற்றோர்காகவுமே தம் படைப்பை வழங்கியுள்ளார் என்பது தெளிவு. அவர் பாட எடுத்துக்கொண்ட விஷயமும் எல்லோருக்கும் உரியதே. இந்நிலையில் கற்றோரால் மட்டும் அறியக்கூடியதாக விளங்கும் உள்ளுறை உவமையை அமைத்துப் படைப்பை இறுக்கமாக வள்ளுவர் விரும்பவில்லை.

**'"குறிப்பாக அமைக்கும் பொருளாதலின் அதனை உள்ளமைப்புக் கூறலும் கடினம்; உய்த்துணர்ந்த பொருள்கோடலும் கடினம். கண்டவர் கண்டவாறெல்லாம் பொருள் கொள்ள இடம் தரும். கூறுவோரும் 'முன்ன மரபின்' அல்லது' முன்னை மரபில்' (பாடவேறுபாடு) கூறவேண்டும்; பொருள் கொள்வோரும் கற்றுத் தெளிவு உடையவராயிருத்தலே உண்மையான உள்ளுறையை உய்த்துணர முடியும் என்பதை இங்கு தொல்காப்பியர் சுட்டிக் காட்டுகிறார் '"[6]**

என அறிஞர் குறிப்பிடுவதிலிருந்து உள்ளுறை உவமத்தை படிக்கும் வாசகரும் கற்ற தெளிவுடையோராக இருந்தாலே பொருளைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும் என்பது புலனாகிறது. எனவே இத்தகைய அணியை சங்க அகத்திணைப் பாடல்களில் பயின்றிருப்பது போன்று மிகுதியாகப் பயில வள்ளுவர் விருப்பம் கொண்டிருக்கவில்லை என்று அறியமுடிகிறது.எனினும் முதலில் குறிப்பிட்டபடி சங்க அகத்திணை மரபைத் திருக்குறட் காமத்துப்பாலில், காணவிரும்பிய கல்வியாளர்கள் சிலர் திருக்குறளில் உள்ளுறை உவமமும் பயின்று வருவதாக எடுத்துக்காட்டுவர்.உள்ளுறை உவமம் (தொ.பா.50) காமத்துப்பாலில் உண்டு

**"தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி**
**அஃதா ண்டவள் செய்தது" (குறள்;1279)**

**(உரை: தன்னுடைய வளையல்களை நோக்கி, மெல்லிய தோள்களையும் நோக்கித் தன்னுடைய அடிகளையும் நோக்கி அவள் செய்த குறிப்பு காதலனைத் தொடர்ந்து செல்வதென்றதாகிய அதுவேயாகும்).**

என்ற குறளில் ஒரு பொருளைச் சுட்டிப் பிரிதோர் பொருட்படுவதால் உள்ளுறையாகும்' [7] என ஆய்வாளர் கொண்டிருப்பது வலிதிற் கொண்டதாகவே இருக்கின்றது.

**நாடக வழக்கும் கூற்றும்;**

அகத்துறைச் செய்திகளை நாடகவழக்கில் பாத்திரங்களின் கூற்றாக வெளிப்படுத்திக் காட்டுவது தமிழர்தம் சிறப்பான நூல்மரபாகும். சங்கப்பாக்களில் காணப்பெறும் இம்மரபையே திருவள்ளுவர் காமத்துப்பாலிலும் பின்பற்றியிருக்கிறார். எனினும், அகத்துறைப் பாடல்களில் காணப்பெறுவது போன்று அவ்வாறே கூற்றுகளைப் பயன்படுத்தாது அவற்றில் மாற்றம் செய்தே பயன்படுத்தியிருக்கக் காணலாம்.

அகத்திணை மரபில் தலைவன் தலைவி ஆகிய பிரதான பாத்திரங்களுக்கு மட்டுமல்லாமல் தோழி , பாங்கன். செவிலி, கண்டனர் முதலிய பல உபபாத்திரங்களுக்கும் கூற்றுகள் உள்ளன.அதுவும் தோழியாகிய பாத்திரத்திற்குச் சில இடங்களில் தலைமைப் பாத்திரங்களை விடவும் அதிக இடம் கூற்றுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக அகநானூற்றின் முதல் 50 பாடல்களில் தலைவி கூற்றாக 13 பாடல்களே அமைந்திருக்கத் தோழி கூற்றாக 17 பாடல்கள் அமைந்திருக்கக் காணலாம்.

இவ்வாறு அமைந்துள்ளமைக்கான காரணத்தையும் ஒருவாறு ஊகித்துக்கொள்ள முடியும். தமது காதலை தாமே கூற்றாக வெளிப்படுத்தும் இயல்பில்லாத தலைவிக்காக -- அவள்தம் பிரதிநிதியாக - தோழியே கூற்று நிகழ்த்துவதாக அகத்திணை மரபு கொள்கிறது. தோழியும் பெண் ஆதலின் அவளும் அனைத்தையும் வெளிப்படையாக தெரிவிக்க முடியாதென கருதி உள்ளுறை உவமம் ,இறைச்சி என்பனவற்றை அதிகமாக பயன்படுத்தும் மரபு இருந்தது. எனினும், தலைவிக்காகத் தோழி கூற்று நிகழ்த்தலாம் எனும் தன்மை. தலைவியாகத் தன்னைப் பாவித்து உரை நிகழ்த்துகிற அனுமதியையும் தோழிக்கு ஒர் குறிப்பிட்ட எல்லையில் வழங்கியது.

> **'"படர்க்கையிடத்தாலாகிய தலைவியையே தோழியான் எனத்தன்மைப் பெயரால் தானாகவே கொண்டு கூறுகின்றாள். இவ்வாறு தான் அவள் எனும் வேற்றுமையற வொன்றிய நட்புரிமை காரணமாகத் தோழி தலைவியை அவள் எண்ணாது யான் எனக் கூறுதலும், அங்ஙனமே தலைவி தோழியை அவள் என்னாது யான் எனக் கூறுதலும். வழுவாயினும், அகப்பொருள் புலனெறி வழக்கில் அவ்வாறு கூறுதலுமுண்டு.''[8]**

என உரையாசிரியர் அமைதி கண்டாலும் தலைவியாகத் தன்னைப் பாவித்துத் தோழி கூற்று நிகழ்த்துவது. அறச்சிறப்பிலது என்பதோடு தலைவன் தலைவிக்கிடையேயான அகவுணர்ச்சித் தொடர்பையும் பாதிப்பதாகும். எனவே, இவ்வாறு தலைவன் தலைவிக்கிடையிலான நேரடியான தொடர்பில் தலையீடு செய்யும் தோழி முதலிய துணைப்பாத்திரங்களின் கூற்றுகளுக்கு தமது நூலில் வள்ளுவர் இடமளிக்கவில்லை.

> **'"இந்த நாடகம் முழுவதும் மூன்றே பாத்திரங்களை கொண்டது, அப்பாத்திரங்களாவன தலைமகன், தலைமகள், தோழி என்பவர்களே. இந்த மூன்றிலும் நடிப்பு, பேச்சு. பாவனை போன்றவை தலைமகன் தலைமகள் என்ற இருவருக்கும்ம் மட்டும்தான். தோழி என்பவள் தலைமகளுக்கு துணையாக பக்கத்தில் இருக்கிற உபகரணம்தான்''[9]**

எனும் நாமக்கல் கவிஞரின் கூற்றும் இதையே குறிக்கிறது. என்றபோதும் பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்கள் தோழிக்கும் கூற்று வழங்கியே உரை செய்திருக்கக் காணலாம். குறிப்பாகப் பரிமேலழகர் உரையில் தோழிக்குரிய கூற்றுகளாக 1150, 1151, 1279 .1288, 1301, 1302, 1231. 1235 ஆகிய குறள்கள் குறிக்கப்பெற்றுள்ளன. ஆனால், இவ்வாறு கொள்வதற்கு கூட சந்தேகம் உள்ளது.

**செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க் குரை. (குறள் 1151)**

**(உரை: பிரிந்து செல்லாத நிலைமையாக இருந்தால் எனக்குச் சொல்; பிரிந்து சென்று விரைந்து வருதலைப் பற்றியானால் அதுவரையில் உயிர் வாழ வல்லவர்க்குச் சொல்).**

என்ற குறளுக்கான சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுகிறபொழுது **'"பிரிந்து கடிதில் வறுவல்'"** என்று தலைமகற்குத் தோழி சொல்லியது என்பார் பரிமேலழகர், தோழிக்கு தலைமகள் ஆற்றாமையாற் கூறியது என்பார் மணக்குடவர். இவ்வாறு ஒரே கூற்றை வெவ்வேறு பாத்திரங்கள் கூறியதாக உரையாசிரியர்கள் தமக்குள் மாறுபடுவதால் இது குறித்த தெளிவான உறுதியான முடிவு இல்லையென்பதே வெளிப்படுகிறது. மேலுள்ள குறளை தோழியின் கூற்றாகக் கொண்டாலும்., தலைவியின் கூற்றாகக் கொண்டாலும் குறளின் உரிப்பொருள் மாறவில்லை என்பது தெளிவு. இவ்வாறு தோழியின் கூற்றாகக் குறிக்கப்பெற்றுள்ள பிற குறள்களைக்கூட தலைவியின் கூற்றாகவே கொள்ள முடியும். எனவே குரலில் நற்றாய், செவிலி, பாங்கன் ஆகியோருக்குக் கூற்றில்லை என்பதுபோல தோழிக்கும் கூற்றில்லையென கொள்ளலாம்.

அவ்வாறாயின் தமது காதலை கூற்றாகவே வெளிப்படுத்தும் இயல்பில்லாத தலைவிக்கு வள்ளுவர் யாது வழியை காட்டுகிறார் என்பது எழக்கூடிய நியாயமான வினாவே. இதற்கு கூற்றுகளைப் பிரதானப்படுத்த வள்ளுவர் மெய்ப்பாட்டை பிரதானப்படுத்தி தமது காமத்துப்பால் அகநாடகத்தை கொண்டு நடத்தியள்ளார் என்பதே பொருத்தமானதாகும்.

**கண்ணோடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்**
**என்ன பயனும் இல.(குறள் :1100)**
**(உரை: கண்களோடு கண்கள் நோக்கால் ஒத்திருந்து அன்பு செய்யுமானால் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல்லாமற் போகின்றன.)**

**தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி**
**அஃதாண்டு அவள்செய் தது ...(குறள் :1279)**

**(உரை: தன்னுடைய வளையல்களை நோக்கி, மெல்லிய தோள்களையும் நோக்கித் தன்னுடைய அடிகளையும் நோக்கி அவள் செய்த குறிப்பு காதலனைத் தொடர்ந்து செல்வதென்றதாகிய அதுவேயாகும்.)**

எனும் குறள்கள் கூற்றை விடவும் கண் முதலிய உறுப்புகளால் வெளிப்படுத்தப் பெறும் மெய்ப்பாடு தலைவன் தலைவர்க்கிடையிலான அகவணர்ச்சித் தொடர்பில் பெரும் முக்கியத்துவத்தையே வலியுறுத்துகின்றன. எனவே சங்க அகத்திணை மரபில் தலைவன் தலைவியர்க்கிடையிலான உறவில் தோழி முதலிய துணைப் பாத்திரங்களுக்கு கூற்று வழங்கப்படும் தன்மை பெரிதும் முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதும். ஆனால் திருக்குறள் காமத்துப்பாலில் துணை பாத்திரங்களின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டு தலைவன்-தலைவி ஆகியோருக்கு இடையிலான மெய்ப்பாடு பெரிதும் முக்கியத்துவம் பெறுகிறது என்பதும் குறிப்பிடத் தக்கன,

இவற்றால் சங்க அகத்திணை மரபின் தொடர்ச்சியாகத் திருக்குறள்-காமத்துப்பால் விளங்கியிருக்கின்ற அதேவேளை ,அது, முன்னை மரபிலிருந்து சில இடங்களில் வேறுபட்டு அறத்துக்கு பெரிதும் முக்கியத்துவம் வழங்கி -- அதனால் காமத்துப்பால் மரபு என புதிய போக்கு ஒன்றை தொடங்கி உள்ளதையும் காணலாம்.

**சான்றாதாரம்**

1. **அறவாணன், கா,பா., (1994) கவிதையின் உயிர் உள்ளம் உடல், தமிழ்க்கோட்டம், புதுச்சேரி; ப. 84.**

2. சாரங்கபாணி.இரா. (1994) வள்ளுவர் வகுத்த காமம், அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம் :ப.70

3. சாமிநாதய்யர்.உ.வே குறுந்தொகை நூலாராய்ச்சி ப. 73

4. மீனாட்சி சுந்தரனார்.தெ.பொ.. (1984) வள்ளுவர் கண்ட நாடும் --காமமும் .பழனியப்பா பிரதர்ஸ் சென்னை, ப; 205

5. சாரங்கபாணி.இரா. (1994) வள்ளுவர் வகுத்த காமம், அண்ணாமலை பல்கலைக்கழகம். சிதம்பரம்; பக்;24, 25

6. தமிழண்ணல். (1986) தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் — உள்ளுறை, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை: ப. 19

7. ஆனந்த நடராசன்.அ (1978) 'அகத்திணையியலும் காமத்துப்பாலும்'. தொல்காப்பியச் சிந்தனைகள் அண்ணாமலை பல்கலைக்கழகம் சிதம்பரம் 158

8. அகநானூறு களிற்றியானை நிரை -- போ வே சோமசுந்தரனார் எழுதிய பதவுரை. (1981), திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை,பக்.17,18

9. நாமக்கல் கவிஞர், (1999), திருவள்ளுவர் இன்பம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, ப. 40...

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2019, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- செப்டம்பர் 10.அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com

✉ aranjournal@gmail.com

✆ 72995 87879